பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
14 11 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டு பிஜேபி அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- தேசிய கூட்டுறவு வாரவிழா இன்று தொடங்குகிறது.
- தமிழகத்தில் மருத்துவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் 21 மாவாட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- தென்னாப்பிரிக்காகவுக்கு எதிரான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 11 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டு பிஜேபி அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் தியோகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் அனைத்து தரப்பினரின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை அரசு செயல்படுத்தி உள்ளதாகத் தெரிவித்தார்.

பிரதமரின் வீட்டுவசதி திட்டம், குழாய் மூலம் குடிநீர் இணைப்பு திட்டம், அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கும் திட்டம் போன்றவற்றால் கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

முந்தை ஆட்சிக் காலங்களில் அரசு செயல்படுத்தும் நலத் திட்டங்களில் ஒரு ரூபாயில் 15 பைசா மட்டுமே மக்களை சென்றடைந்ததாகவும், தற்போது திட்டப்பயன்கள் அனைத்தும் நேரடியாகவும், முழுமையாகவும் மக்களை சென்றடைவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மருத்துவர்கள் சங்கத்தினருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு காணப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு மருத்துவர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, மருத்துவர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் அறிவித்ததைத் தொடர்ந்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பான மருத்துவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று அவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மா சுப்ரமணியன் ) -50---- செகண்ட்*

**[]<<<>>>[]**

மருத்துவமனைகளில் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத் துறையினரின் பாதுகாப்பை மாநில அரசு உறுதி செய்ய வேண்டுமென்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கேட்டுக் கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சென்னையில் அரசு மருத்துவர் மீதான தாக்குதல் வன்மையாக கண்டிக்கத்தக்கது என தெரிவித்துள்ளார்.

மருத்துவர்களுக்கு எதிரான எந்தவொரு வன்முறையையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், மருத்துவர் பாலாஜி விரைவில் உடல்நலம் பெற பிரார்த்திப்பதாகவும் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் வன்முறைகளையும் குற்றங்களையும் ஒடுக்குவதற்கான நடவடிக்கைளை மாநில அரசு தீவிரப்படுத்த வேண்டும் என பிஜேபி மாநில ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு ஹெச் ராஜா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் சென்னையில் அரசு மருத்துவர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

திமுக ஆட்சியில் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், அதனை சீர் செய்ய தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு துரிதப்படுத்த வேண்டும் என்று திரு ஹெச் ராஜா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

அகில இந்திய கூட்டுறவு வார விழா இன்று தொடங்குகிறது.

வரும் 20-ம் தேதி வரை நடைபெறும் இந்த விழாவில், கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்

தமிழகத்தில் கூட்டுறவு வார விழாவை அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு கே ஆர் பெரிய கருப்பன் சிவகங்கையில் தொடங்கி வைக்கிறார்.

சமூக பொருளாதார மேம்பாட்டில் கூட்டுறவின் பங்கு என்ற முதன்மை கருப்பொருளின் அடிப்படையில், கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துதல், கூட்டுறவில் சிறந்த நிர்வாகம், வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு என ஒவ்வொரு நாளும் ஒரு கருப்பொருளின் அடிப்படையில் இந்த ஆண்டு கூட்டுறவு வாரவிழா தமிழகத்தில் கொண்டாடப்படவுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

மறைந்த முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 136-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாள் குழந்தைகள் தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி பள்ளிகளில் குழந்தைகளுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

சென்னை சாந்தோம் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெறும் குழந்தைகள் தின விழாவில் துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கர்நாடக அரசு காவிரியில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உரிய காலத்தில் வழங்க வேண்டுமென காவிரி ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.,

இக்குழுவின் 107-வது கூட்டம் அதன் தலைவர் திரு வினித் குப்தா தலைமையில் காணொலி மூலம் நேற்று நடைபெற்றது.

நவம்பர் மாதத்தில் கர்நாடக 13 புள்ளி ஏழு எட்டு டி எம் சி தண்ணீர் வழங்க வேண்டுமென்றும் அதனை வழங்க வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இம்மாதத்திற்குரிய நீரில் ஒன்பது புள்ளி ஐந்து எட்டு டி எம் சி தண்ணீர் தமிழகத்திற்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும், எஞ்சிய தண்ணீர் விரைவில் வழங்கப்படும் என்றும் கர்நாடக அரசு தரப்பில் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

[]<<<>>>[]

தமிழகத்தில் பொதுப்பணித்துறை சார்பில் கட்டப்பட்டு வரும் கட்டிடங்களை குறித்த காலத்திற்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் பொதுப்பணித்துறை சார்பில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கட்டிடங்கள் கட்டப்படுவதாகக் கூறினார்.

திருவண்ணாமலையில் சமுத்திரம் பகுதியில் கட்டப்படும் நவீன சமுதாயக்கூடம் விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்றும் திரு ஏ வ வேலு தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மதுரை, சிவகங்கை, கன்னியாகுமரி உள்ளிட்ட 21 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அது கூறியுள்ளது.

இதனிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் மிதமான மழை பெய்துள்ளது.

[]<<<>>>[]

அமெரிக்காவில் அதிகார மாற்றம் குறித்து அந்நாட்டு அதிபர் திரு ஜோ பைடனை, புதிய அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள திரு டொனால்ட் டிரம்ப் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

[]<<<>>>[]

உக்ரைன் தலைநகர் கீவ் நகர் மீது கடந்த இரண்டரை மாதங்களுக்குப் பிறகு மீண்டும் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை ரஷ்யா நடத்தியுள்ளது.

[]<<<>>>[]

கோவாவில் வரும் 20-ம் தேதி தொடங்கவுள்ள இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் வழங்கப்படும் தங்க மயில் விருதுக்கு இந்தியாவின் மூன்று திரைப்படங்கள் உட்பட 15 படங்கள் போட்டியிடுவதாக தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொது நிர்வாகத்தில் ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பான இந்திய - மலேசிய கூட்டு ஆணைய கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

நாகை மாவட்டம் நாகூர் தர்கா கந்தூரி விழா முன்னேற்பாடுகள் குறித்து மாநில அமைச்சர்கள் திரு நாசர், திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் ஆய்வு செய்தனர்.

[]<<<>>>[]

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள், 12-ம் வகுப்பு வரை ஆண்டு தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை பெறுவதற்கான ஊரக திறனாய்வு தேர்வுக்கு வரும் 20-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என மாநில பள்ளிக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 490 பயனாளிகளுக்கு ஆறு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி அருணா வழங்கினார்.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 41 கிலோ ரேஷன் அரிசியை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

திருநெல்வேலி - சென்னை இடையே வாரம் தோறும் வியாழக்கிழமை இயக்கப்படும் சிறப்பு ரயில் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தென்னாப்பிரிக்காகவுக்கு எதிரான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 11 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

செஞ்சூரியனில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஒவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 219 ரன் எடுத்தது.

220 ரன் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா ஏழு விக்கெட் இழப்புக்கு 208 எடுத்து தோல்வியடைந்தது.

நான்கு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் மூன்று – ஒன்று என்ற கணக்கில் இந்தியா முன்னிலையில் உள்ளது.

நான்காவது மற்றும் இறுதி டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி ஜோகனஸ்பெர்க்கில் நாளை நடைபெறுகிறது.

[]<<<>>>[]

76-வது தேசிய ட்டிராக் சைக்கிளிங் போட்டி சென்னையில் நாளை தொடங்கவுள்ளது.

வரும் 19-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் 28 மாநிலங்கள் மற்றும் எட்டு யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 700 வீரர்கள் பங்கேற்க உள்ளதாக மாநில விளையாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு அதுல்ய மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]